# வெலிகம பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 17 ஆந் திகதியும் (திருத்திய) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து வெலிகம பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,166,494 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கைவிடப்பட்டிருந்த இரண்டு நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 3,527,930 இற்கான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொடவில முன் பள்ளி ஒன்றின் மலசலகூடம் நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 267,223 இற்கான செலவுகளை மூலதனப்படுத்துவதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 250,589 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான 15 காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து, நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ந்தும் முன்கொண்டு வரப்படுகின்ற தொங்கல் கணக்கில் காணப்படும் ரூபா 65,791 இற்கான செலவு மீதியினை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் 2015 ஆண்டின் போது திரண்ட நிதியக் கணக்கிற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 34,008,683 தொகையான நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் மீதியில், 03 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 3,466,307 இற்கான மீதியொன்றும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,360,575 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதியில், 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 206,587 இற்கான 06 மீதிகளும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கடந்த வருடத்திற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா 825,680 தொகைக்கான பெறுமதி கூட்டிய வரி வைப்புக்கள் மற்றும் நிர்மாண வேலைக்கான தடுத்து வைத்தல் மீதி என்பவற்றை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கூட்டுத்தொகை ரூபா 78,680,944 தொகைக்கான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீட்டுச் சபை அறிக்கையும், கூட்டுத்தொகை ரூபா 8,651,483 தொகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நாளது வரை மற்றும் முறைப்படி பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும், ரூபா 80,742 தொகைக்கான சேமிப்பு வைப்புக்கள் தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்தல்களும், ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 146(1) இன் பிரகாரம் 1998 ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக வீதவரி செலுத்தும் 3585 நுகர்வோரின் ஆதனங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து புதிய பெறுமதி மதிப்பீட்டு பெறுமதியில் வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 189 இன் பிரகாரம் ரூபா 21,197 தொகைக்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினால் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,379,299 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 31,513,647 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 24,865,652 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வீதவரி மற்றும் வரி**

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 954,967 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 288,416 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 1,243,383 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 204,271 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 1,039,112 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 123,433 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 11,316 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 134,749 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,828 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 129,921 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.2 வாடகை**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 958,401 தொகை ஆகக் காணப்பட்டதுடன், ரூபா 2,892,127 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 3,850,528 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 3,262,431 தொகையாகக் காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 588,097 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 5,209,614 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 78,567,039 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

**2.3 மிகை விதிப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது என்னால் வழங்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 7,750,286 தொகைக்கான 10 மிகை விதிப்பு சான்றிதழ்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 மூலதன வேலைத் திட்டங்கள் நிறைவேற்றுவதில் முன்னேற்றம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு மூலதனச் செலவு ரூபா 46,380,000 தொகையாக இருந்த போதிலும், உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 19,361,915 தொகை எனப்படும் மதிப்பீட்டு பெறுமதியில் 42 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்காக பாதீட்டின் பிரகாரம் பல்வேறு நிதியேற்பாடுகள் மற்றும் சபையின் நிதியத்திலிருந்து ரூபா 14,625,000 தொகைக்கான 27 வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 500,000 தொகைக்கான ஒரு நிர்மாண வேலை மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,950,000 தொகைக்கான 04 வேலைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ஒரு நிர்மாண வேலையும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான தொகை நடைமுறை கணக்கொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் வேலைத்திட்டம் செயற்படுத்தாமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 950,000 இற்கான தொகையை வழங்குவதற்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செலுத்துவதற்கு மறுத்திருந்தது.

(ஈ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கடந்த 02 வருடங்கள் தொடர்பாக கிடைத்திருந்த ஏற்பாடுகள் ரூபா 2,504,835 தொகைக்கான 04 நிர்மாண வேலைகள் மற்றும் மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா 2,700,000 தொகைக்கான நிர்மாண வேலையொன்று 2017 ஆகஸ்ட் 02 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 5,092,041 இற்கான 03 நிர்மாண வேலைகளில் நிறைவேற்றப்பட்டிருந்த வேலைகளின் பெறுமதி ரூபா 3,168,827 தொகையாகக் காணப்பட்டமையால் அந்த நிர்மாண வேலைகளை நிதி முன்னேற்றம் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான பெறுமதி 47 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையில் வீச்சில் காணப்பட்டது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறையான அங்கீகாரம் இன்றி சபையினால் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 5,313,836 இற்கான செலவு ஒன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் மற்றும் 55 மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி ரூபா 6,453,232 தொகையாக இருந்ததுடன் அம் மீதியில் தவணைப் பணம் மற்றும் வட்டி அறவிடப்படாத ரூபா 117,349 தொகைக்கான 03 மீதிகளும் அடங்கியிருந்தது.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆண்டின் போது ரூபா 1,166,494 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த கரப்பந்தாட்டத் திடல் 2017 ஆகஸ்ட் 04 திகதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) சபையின் சார்க்கடை பவுசர் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இருந்து செயற்படாது காணப்பட்டதுடன் பழுதுபார்த்த் வேலைக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 391,715 இற்கான உதிரிப்பாகங்களும் 2017 ஆகஸ்ட் 04 திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1992 செப்தெம்பர் 30 திகதிய 5/2/2/10(ii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகளை துண்டுகளாக்கி விற்கும் போது பொது வசதிகளுக்காக அவ்வாறு விற்பனை செய்யும் காணியின் அளவில் 10 சதவீதக் காணித் துண்டு ஒன்று சபைக்கு உரித்தாக்க வேண்டுமெனினும், அவ்வாறு பெற வேண்டிய 12 ஏக்கர் 03 ருட் 0.26 பர்சஸ் காணியை சபை இழந்துள்ளது.

**3.5 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2016 ஆண்டின் போது குப்பை முகாமைத்துவத்திற்காக ரூபா 11,870,262 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றுவதற்காக நிரந்தர நடைமுறையொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையினால் 3057 தொன் திண்மக் கழிவுப்பொருள் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மூலம் வருமானமேதும் உழைத்திருக்கவில்லை. அதே போல் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வர்த்தக வரி செலுத்தும் 358 ஹோட்டல்கள் காணப்பட்டதுடன், அவற்றில் இருந்து குப்பை சேகரிப்பதற்கு கட்டணம் அறவீடு செய்வதற்கான துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 சுற்றாடல் சார் தாக்கங்கள்**

2008 ஜனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய 25 கைத்தொழில்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் வர்த்தக வரி செலுத்தும் 322 நிறுவனங்களில் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமையால் சபைக்கு ரூபா 1,416,800 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் பிரதிகூலமான தாக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. 08 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 27,042,557 தொகைக்கான சேமிப்புக்களும், 04 வருமான விடயங்களில் நெருங்கப்படாத இலக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 11,917,594 தொகையும் காணப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை அரச நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய

த.ப.பா/யஹ/01/ந.ச.லே இலக்கங் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 438,630 இற்கான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை செயற்படுத்துதல்**

2009 ஜூன் 09 திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமானம் சேகரித்தல்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்